பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
03 04 2026 FRIDAY 12 40 PM

ஆகாஷவாணி
(Tune)
செய்திகள் -

## தலைப்புச் செய்திகள்

1. கேரளம், அஸ்ஸாம், புதுச்சேரியில் வரும் ஒன்பதாம் தேதி நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரசாரம் தீவிரம் அடைந்துள்ளது.
2. பெட்ரோலியப் பொருட்களை பதுக்கி வைப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாநில அரசுகளை மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.
3. தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில் NCERT-க்கு நிகர்நிலை பல்கலைக்கழக அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளதாக மத்திய கல்வி அமைச்சகம் தெரிவித்துள்ளது.
4. ஈரானின் மிக உயரிய B-1 பாலம் தாக்கி அழிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார்.
5. கேலோ இந்தியா பழங்குடியின விளையாட்டுப் போட்டிகள் இன்றுடன் நிறைவடைகிறது.

... இனி விரிவான செய்திகள்...

<<<<<< >>>>>

கேரளம், அஸ்ஸாம், புதுச்சேரியில் வரும் ஒன்பதாம் தேதி நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரசாரம் தீவிரம் அடைந்துள்ளது.

புதுச்சேரியில் பிஜேபி மூத்த தலைவரும் பிரதமருமான திரு. நரேந்திர மோடி இன்று பிரசாரம் மேற்கொள்கிறார்.

புதுச்சேரி அண்ணா சாலை தொடங்கி காமராஜர் சிலை வரை சாலை பேரணி பிரசாரத்தில் பிரதமர் ஈடுபடவுள்ளார்.

கேரளத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிஜேபி மூத்த தலைவர் திரு. ஜே பி நட்டா, திருவனந்தபுரத்தில் பிரசாரம் மேற்கொள்கிறார்.

இடது ஜனநாயக முன்னணி வேட்பாளர்களை ஆதரித்து மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு மாநில செயலாளர் திரு. எம்.வி. கோவிந்தனும், இந்திய கம்யூனிஸ்டு மாநில செயலாளர் திரு. Binoy Viswam திருவனந்தபுரம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பிரசாரம் மேற்கொற்கின்றனர்.

ஐக்கிய ஜனநாயக முன்னணி வேட்பாளர்களை ஆதரித்து காங்கிரஸ் மூத்த தலைவர்கள் திரு. Deepender Singh Hooda, திரு. டி.கே. சிவக்குமார் உள்ளிட்டோர் பிரசாரம் செய்கின்றனர்.

<<<<<< >>>>>

நாடாளுமன்றத்தில் Jan Vishwas சட்ட திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டது வரவேற்கத்தக்கது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் இதன் மூலம் நாட்டில் வணிகம் மேற்கொள்வதற்கான நடைமுறைகள் எளிதாக்கப்படும் என்று கூறியுள்ளார்.

தேங்கியுள்ள வழக்குகளுக்கு விரைந்து தீர்வு காணவும் இந்த சட்டம் வழி வகை செய்யும் என்றும் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா வெளியிட்டுள்ள பதிவில், இந்த சட்ட திருத்தம் மூலம் நாட்டில் வணிக நெறிமுறைகள் எளிதாக்கப்படும் என்று கூறியுள்ளார்.

புதிய இந்தியா என்ற பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வைக்கு ஏற்ப திட்டங்களை செயல்படுத்த இந்த சட்டம் வழிவகை செய்யும் என்றும் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய மத்திய வர்த்தக, தொழில் துறை அமைச்சர் திரு. பியூஸ் கோயல், இந்த சட்டம் மூலம் எளிய மக்கள் பயனடைவர் என்று கூறினார்.

பொறுப்புடன் கூடிய நிர்வாகம் மூலம் வணிக சட்டங்களை எளிதாக்க இந்த புதிய சட்டம் வழிவகை செய்யும் என்றும் திரு. பியூஸ் கோயல் தெரிவித்தார்.

மக்களவையில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்ட இந்த சட்ட திருத்த மசோதா மாநிலங்களவையில் நேற்று நிறைவேற்றப்பட்டது.

<<<<<< >>>>>

இந்தியா- ரஷ்யா இடையே வர்த்தகம், தொழில், எரிசக்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒருங்கிணைந்து செயல்படவுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், ரஷ்ய துணை பிரதமர் Denis Manturov உடன் புது தில்லியில் ஆலோசனை நடத்தியதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தியா- ரஷ்யா வருடாந்திர உச்சி மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றுவது குறித்து இதில் முக்கியமாக விவாதிக்கப்பட்டதாகவும் வெளியுறவுத்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<<< >>>>>

சத்ரபதி சிவாஜி மகாராஜின் நினைவுநாள் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்தியாவின் பெருமையை கட்டிக்காத்த வீரர் சிவாஜி மகாராஜ் என்று புகழாரம் சூட்டினார்.

கலாச்சார பாரம்பரியத்தையும் மராட்டிய மொழியையும் தமது வாழ்க்கை மூலம் பாதுகாத்தவர் சிவாஜி மகாராஜ் என்று திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்.

<<<<<< >>>>>

சமையல் எரிவாயு சிலிண்டர்கள் மற்றும் பெட்ரோலியப் பொருட்களை பதுக்கி வைப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க மாநில அரசுகளை மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

இது தொடர்பாக மத்திய பெட்ரோலிய இயற்கை எரிவாயு அமைச்சக செயலர் டாக்டர் Neeraj Mittal, மாநில அரசுகளுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

சமையல் எரிவாயு மற்றும் பெட்ரோலிய பொருட்கள் இருப்பு குறித்து வதந்திகள் பரவி வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாநில அரசுகள் சமூக மின்னணு ஊடகங்கள் மூலம் இது தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

நாட்டில் போதுமான அளவுக்கு பெட்ரோலிய பொருட்கள் இருப்பில் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

<<<<<< >>>>>

இயேசுபிரான் சிலுவையில் அறையப்பட்ட நாளான புனித வெள்ளி இன்று கடைபிடிக்கப்படுகிறது.

*இந்நாளையொட்டி, குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இயேசுபிரானின் தியாகத்தை நினைவுகூர்வதாக தெரிவித்துள்ளார்.*

*இயேசுபிரானின் வாழ்க்கையும், போதனைகளும் அனைவரும் நேர்மையான பாதையில் செல்ல வழிவகுப்பதாக கூறியுள்ளார்.*

*பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இயேசுபிரானின் தியாகம் அனைவரின் உள்ளங்களில் நல்லிணக்கம், கருணை உள்ளிட்ட மாண்புகளை ஏற்படுத்தட்டும் என்று தெரிவித்துள்ளார்.*

*மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லா வெளியிட்டுள்ள செய்தியில், மனிதகுலத்திற்காக உயிர்தியாகம் செய்த இயேசுபிரானை அனைவரும் நினைவுகூர்வதாக தெரிவித்துள்ளார்.*

*<<<<<< >>>>>*

*தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில் NCERT-க்கு நிகர்நிலை பல்கலைக்கழக அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளதாக மத்திய கல்வி அமைச்சகம் தெரிவித்துள்ளது.*

*இது தொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பல்கலைக்கழக மானியக்குழுவின் பரிந்துரைக்கு ஏற்ப இந்நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளது.*

*பல்கலைக்கழக மானியக்குழு நிபுணர் குழுவின் பரிந்துரையின்படி NCERT-க்கு நிகர்நிலை பல்கலைக்கழக அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளது.*

*இதனையடுத்து NCERT ஆராய்ச்சி படிப்புகள் மற்றும் முனைவர் பட்டம் தொடர்பான கல்வித் திட்டங்கள் தொடங்க நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டுள்ளது.*

*<<<<<< >>>>>*

*தமிழகத்தில் நூறு சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.*

*தர்மபுரி மாவட்டத்தில் நடந்த தேர்தல் குறித்த விழிப்புணர்வு நடைப்பயணத்தில் ஏராளமானோர் கலந்து கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவித்துள்ளார்.*

*(வாய்ஸ் பைட்- தர்மபுரி 36 Sec)*

*<<<<<< >>>>>*

*Hormuz நீரிணை வழியாக எண்ணெய் கப்பல்கள் பாதுகாப்பாக செல்வதற்கான நடவடிக்கைகள் குறித்து ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் இன்று வாக்கெடுப்பு நடைபெற உள்ளது.*

*ராணுவ நடவடிக்கை மூலம் Hormuz நீரிணையை மீட்பதற்கு Bahrain கொண்டு வந்த தீர்மானம் மீது இந்த வாக்கெடுப்பு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.*

*இந்த தீர்மானத்துக்கு ஆறு வளைகுடா நாடுகளும் Jordan-னும் ஆதரவு தெரிவித்துள்ளன.*

*15 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் அமெரிக்கா, பிரிட்டன், சீனா, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளும் உள்ளன.*

*<<<<<< >>>>>*

*வளைகுடா நாடுகளில் சிக்கியுள்ள நேபாள நாட்டு மக்களை பாதுகாப்பாக மீட்பதற்கு சிறப்பு விமான சேவை இயக்கப்படும் என்று அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.*

*நேபாள வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுளள அறிவிப்பில், நேபாள் ஏர்லைன்ஸ் இன்று இரவு துபாயில் இருந்து காட்மண்டுவுக்கு இயக்கப்பட உள்ளதாக தெரிவித்தது.*

*நாளை மறுநாள் சவுதி அரேபியாவின் Dammam விமான நிலையத்தில் இருந்து காட்மண்டுவுக்கு சிறப்பு விமானம் இயக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.*

*<<<<<< >>>>>*

*ஈரானின் மிக உயரிய B-1 பாலத்தை தாக்கி அழித்துள்ளதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார்.*

*இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் ஈரான் அரசு அமைதி ஒப்பந்தத்துக்கு முன்வரவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.*

*ஈரானின் டெஹ்ரான் மற்றும் Karaj-ஐ இணைக்கும் B-1 பாலம் தாக்கப்பட்டதில் 8 பேர் உயிரிழந்தனர். 95-க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்ததாக அந்நாட்டு அரசு கூறியுள்ளது.*

*<<<<<< >>>>>*

*அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் Pete Hegseth அந்நாட்டு உயர் ராணுவ அதிகாரிகளை பதவி நீக்கம் செய்துள்ளார்.*

*அமெரிக்க ராணுவ தலைமை தளபதி ஜெனரல் Randy George-ஐ பதவி நீக்கம் செய்ததையடுத்து ராணுவ உயர் அதிகாரிகள் டேவிட் மற்றும் வில்லியமை பதவி நீக்கம் செய்ய உத்தரவிட்டுள்ளார்.*

*முன்னாள் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் நியமித்த ஜெனரல் Randy George உள்ளிட்ட ராணுவ உயர் அதிகாரிகள் பதவி நீக்கம் செய்தது பாதுகாப்பு கொள்கையில் மாற்றங்கள் கொண்டு வருவதற்கான செயல் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*<<<<<< >>>>>*

*கேலோ இந்தியா பழங்குடியின விளையாட்டுப் போட்டிகள் இன்றுடன் நிறைவடைகிறது.*

*ராய்ப்பூரில் இன்று மாலை நடைபெறும் விழாவில் முதலமைச்சர் திரு. Vishnu Deo Sai, பிரபல விளையாட்டு வீரர்கள் Mary Kom, Bhaichung Bhutia உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர்.*

*இதுவரை கர்நாடகா 23 தங்கப்பதக்கங்களுடன் முதலிடத்திலும், ஒடிசா 20 தங்கப்பதக்கங்களுடன் இரண்டாவது இடத்திலும், ஜார்கண்ட் 12 தங்கப்பதக்கங்களுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளன.*

------------------

*20 வயதுக்குட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து போட்டியின் இறுதியாட்டத்தில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.*

*<<<<<<END>>>>>*